# திருமதி இந்திரா காந்தி மீது முழு நம்பிக்கை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

ஈழநாடு சந்தா
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 275
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-0(

யாழ்ப்பாணம் ஐப்பசி 29 நம்ழான் 3 வெள்ளிக்கிழமை [14-11-69]

## காங்கிரஸ் ஆட்சிமன்ற குழு தீர்மானம்

புதுடில்லி, நவ. 13

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீது முழு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானமொன்றை இன்று புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழு நிறைவேற்றியது.

திருமதி காந்தியை கட்சியிலிருந்து விலக்குவதற்காக திரு. நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய காரியக்கமிட்டி உறுப்பினர்கள் நிறைவேற்றிய தீர்மானம் செல்லாது என்றும், ஆட்சிமன்றக் குழுவுக்கு திருமதி காந்தியே தொடர்ந்து தலைவராக இருக்கிறார் என்றும் மேற்படி தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

மொத்தம் 432 பேர் அங்கம்வகிக்கும் காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்திற்கு 330 உறுப்பினர்கள் வந்திருந்தனர் இவர்களில் திரு பக்ரவு மிஸ்ரா எனபவரைத்தவிர மற்றயயாவரும் தீர்மானத்தை ஆதரித்தனர்.

திரு சவான் இந்தத்தீர்மானத்தை தாக்கல் செய்தார் திரு ஜகஜீவன்ராம் வழிமொழிந்தார்

நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதும் பிரதம மந்திரி பேசுகையில் இது எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்பட்ட ஆதரவு அல்ல சில கொள்கைகளுக்கும், திட்டங்களுக் கு மாகவே இந்த ஆதரவு தெரிவிக்கப் படுகிறது என்றார்

நேற்று திரு நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் திருமதி காந்தியின் சில நடவடிக்கைகளை யொட்டி அவரை கட்சியின் ஆதார உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதென்று தீர்மானித்தனர் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்றக்குழுவின் தலைவர் பதவியிலிருந்தும் அவரை விலக்கிவிட்டு வேறு ஒருவரைத் தெரிவுசெய்யும் படியும்காரியக்கமிட்டியினர் சிபாரிசு செய்தனர் இது பற்றி இன்று காங்கிரஸ் ஆட்சிமன்ற பொதுக்குழு ஆராய்ந்தது பொதுக்குழுவின் கூட்டம் ஆட்சிமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது

### அசாதாரண சூழ்நிலை

ஆட்சிமன்றக்குழு கூட்டத்...வது நியாயமற்ற குற்றச்சாட்டு என்றார்

கட்சியில் பூசல் வெகுகாலமாகவே இருந்துவந்துள்ளது என்னைச் சர்வாதிகாரி என்றும் கம்யூனிஸ்ட் என்றும் பட்டை தீட்ட முயன்று முயன்றவந்திருக்கிறார்கள் எதையும் சாங்கோபாங்கமாக விவாதிப்பதை நான் ஆதரித்து வந்திருக்கிறேன். ஆனல் விவாதங்களையும், கருத்து வெளியீட்டையும் நசுக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. விவாதங்களை மறுப்பவர்கள் தான் சர்வாதிகாரிகள். என்றார் பிரதம மந்திரி.

கூட்டத்துக்கு வந்திருந்த 330 பேரில் ஒருவர் வாக்களிக்கவில்லை. பலர் வசதியின்மையால் கூட்டத்துக்கு வரவில்லை. என்றுலும் பல உறுப்பினர்கள் தந்தி மூலமாகவும், டெலிபோன் மூலமும் தமது ஆதரவைத் தெரிவித்திருப்பதாக திருமதி காந்தி கூறினர்.

திருமதி காந்தி மீது முழு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை திரு சவான்சமர்ப்பித்துப்பேசுகையில் மக்களின் பூரண ஆதரவு திருமதி காந்திக்கு இருக்கின்றது என்றார் திரு ஜக ஜீவன்ராம் பேசுகையில் திருமதி காந்தி மீது நடவடிக்கை எடுப்பதற்கு 11 பேர் கொண்ட காரியக்கமிட்டியேமுடிவு செய்ததுஇதிலும்இருவர்இந்தத் தீர்மானத்தை எதிர்த்ததாகத்தெரிகிறது என்றார்

திருபக்ருதீன் அலிஅகமத் பேசுகையில்,காரியக்கமிட்டியில் திருமதி காந்திமீது நடவடிக்கை எடுக்கும் முன்னர்

# பிரதமருக்கு வடக்கில் மகத்தான வரவேற்பு இன்று காத்திருக்கிறது

— நமது அலுவலக நிருபர் 'யோகி' —


யாழ்ப்பாணம்,வெள்ளி

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் மூன்றுவது தடவையாக பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்று வடபகுதிக்கு விஜயம் செய்கின்றார் இவருடன் தேசிய அரசாங்கத்தின் சில அமைச்சர்களும் அமைச்சு உத்தியோகத்தர்களும் வருவார்கள். இன்று காலை 8மணிக்கு இலங்கை விமானப் படையைச்சேர்ந்த விமானத்தில் பிரதமர்பலாலி விமானநிலயத்தை வந்தடைவர்.

பலாலி விமான நிலையத்தில், பிரதமருக்குப், மந்திரிகளுக்கும் வரவேற்பளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வடபகுதி பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் வரை பிரதமர் வரும்பொழுது, பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும், பாதையின் இருகரையிலும் திரண்டுநின்று வரவேற்பளிப்பார்கள்

காலை 9-10 மணிக்கு கிங்ஸ் கவுஸிலிருந்து பிரதமர் புறப்படுவார், காலை 9-15மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறவிருக்கும், மாவட்டவிவசாய கமிட்டிவிசேஷ கூட்டத்தில் பிரதமர் கலந்து கொள்வார்.

பிற்பகல் 2-10 மணிக்கு விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு பிரதமர் செல்வார். கிருஷிக பாடசாலையை பார்வையிடுவார், பிற்பகல் 2-50 மணிக்கு இணுவில் தனியார் துறை பழவிருட்சதோட்டங்களுக்கும் செல்வார், 3-45 மணிக்கு அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பிரதமர் செல்வார், 4-45 மணிக்கு தொண்டமனாறு கடலேரித்திட்ட பிரதேசத்திற்கு செல்வார், இரவு 7-15 மணிக்கு வடபகுதி விளைபொருள் உற்



## 'பிரச்னைகளை தீர்க்க தேசிய அரசாங்கம் தவறிவிட்டது'

### யாழ்ப்பாணத்தில் திரு. கெனமன்

மல்லாகம்,புதன்

'நமது நாட்டில் பொதுவாக சிக்கலடைந்து சீரழிந்துவரும் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கு இன்றைய தேசிய அரசாங்கம் தவறிவிட்டது. இத்தகைய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து அகற்ற தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகள் நாட்டிலுள்ள ஏனைய ஜனநாயக சக்திகளுடன் ஒன்றுசேர்ந்து செயலாற்ற முன்வரவேண்டும்.''

யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். பிரதேச கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற மாவட்டகமிட்டிக் கூட்டத்தில்கலந்து கொண்டு பேசும்போது திரு பீற்றர் கெனமன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு வ பொன்னம்பலம் ... கண்டு நாடு முழுவதிலும் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக அணி திரள்கின்றனர். இன்னும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் தேசியஅரசுடன் இணைந்து ஒட்டிக் கொண்டிருப்பது விசித்திரமானது. தமிழ் இனத்தவரின் நியாயபூர்வமான உரிமைகளில் எதையும் இன்றுவரை நிறைவேற்றத் தவறிய டட்லியின் அரசாங்கத்திற்குத் தொடர்ந்து தமிழ்க் காங்கிரஸார் ஆதரவு வழங்குவதற்கு இவர்கள் தமிழ் மக்களுக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.''

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த திரு. பீற்றர் கெனமன் எம். பி. மாவட்ட கிளை புனரமைப்பு தற்போதைய அரசியல்நிலை தேர்தல் அபேட்சகர்கள் தெரிவு போன்ற நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில்கலந்து கொண்டு பேசும்போது திரு பீற்றர் கெனமன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு வ பொன்னம்பலம் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு கெனமன் மேலும் கூறியதாவது.-

தேசிய அரசாங்கத்தினர் இழைத்து வரும் தவறுகளை ...டும்.''

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த திரு. பீற்றர் கெனமன் எம். பி. மாவட்ட கிளை புனரமைப்பு தற்போதைய அரசியல்நிலை தேர்தல் அபேட்சகர்கள் தெரிவு போன்ற நடவடிக்கைககள் குறித்துப் பேச்சு வார்த்தைகள் பிரதிநிதிகளுடன் நடத்தினர். திரு. கெனமன் மறுதினம் கொழும்பு திரும்பினர்.

# "நிஜலிங்கப்பா குழுவின் 'விலக்கல்' சட்ட விரோதமானது"

## இந்திரா இல்லத்தில் தீர்மானம்

புதுடில்லி, நவ. 12

நிஜலிங்கப்பா குழுவின் 'விலக்கல்' முடிவு சட்டவிரோதமானதென்றும், இந்திராகாந்தி தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் அங்கத்தவராகவும் ஆட்சிமன்றக்குழுத்தலைவராகவும் இருக்கலாமென்றும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இல்லத்தில் இன்று மாலை நடந்த கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திராவுக்கு ஆதரவான காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த அங்கத்தவர்களும், சில காங்கிரஸ் முதலமைச்சர்களும், காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழு அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# 'தற்கொலை செய்வதை தடுக்கமுடியாது'

## காங்கிரஸ் பற்றி தமிழக முதல்வர்

காங்கிரஸுக்குள் ஒற்றுமையேற்படுமென்று எதிர்பார்த்தோம் ஆனல் அது தற்கொலைசெய்வதைதடுக்க முடியாது'

காங்கிரஸ் காரியக்கமிட்டி திருமதி இந்திராகாந்தியை கட்சியிலிருந்துவிலக்கமுடிவு செய்ததுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், தமிழக முதல்வர் திரு.மு.கருணநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'காங்கிரஸ் காரியகமிட்டியின் முடிவுமத்திய அரசின் உறுதிப்பாட்டைப் பாதிக்காது' என்று அமைச்சர் திரு. சவான் கருத்துத் தெரிவித்தார்.

நிஜலிங்கப்பா குழுவினரின் இந்த முடிவு அவசரமான ஒரு முடிவென்றும் அவர் கூறினர்.

முன்னுள் காங்கிரஸ் தலைவர், ஆந்திரா முதல்வர் திரு. பிரமானந்தரெட்டி, திரு. ரகுராமையா ஆகியோர் காரியக்கமிட்டியின் முடிவைக் குறை கூறியுள்ளனர்.

முதுபெரும் அரசியல்வாதியான சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் கருத்துத் தெரிவிக்கவில்லை.

— —

## எதிர்ப்பு

மட்டக்குளியா, வியாழன்

நபிகள் நாயகத்தின் வாழ்க்கைத்திரைப் படத்துக்கு எதிராக சகல இயக்கங்களும் தெரிவிக்கும் எதிர்ப்பில் தாங்களும் கலந்து கொள்வதாக மட்டக்குளியா ரசூல் மௌலூட் இயக்க இஸ்லாமிய கலாச்சார சங்கம் தெரிவித்துள்ளது.



திடற்புலத்தில்

# மாபெரும் வரவேற்பு பிரதமருக்கு அளிக்கப்படும்

மல்லாகம், புதன்

திடற்புலம் சிறுபான்மைத் தமிழர் குடியேற்றத்திட்டத்திற்கு 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை விஜயம் செய்யும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவிற்கு வலிகாமம் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜத்தினர் மாபெரும் வரவேற்புபசாரம் அளிக்கவிருக்கின்றனர்.

காலை 8-15 மணிக்கு குடியேற்றத்திட்டத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படும் பிரதம மந்திரி 8-25 மணிக்கு ஞாபகக் கல்லினை திரைநீக்கம் செய்து வீடமைப்புத்திட்டத்தைதிறந்து வைப்பார். வீடமைப்புத் திட்ட வீடுகளைப் பார்வையிட்ட பின்னர் வரவேற்புக் கூட்டத்தில் பிரதமர்கல து கொள்வார். வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்படுவதையடுத்து மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே எம். சபாரத்தினம் உரை நிகழ்த்துவார். இதன் பின்பு பிரதமர் டட்லி பதிலுரை வழங்குவார்.

0 0

## அளவெட்டியில் வரவேற்பு

அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வெள்ளிக்கிழமை மாலை 3-45 மணிக்கு விஜயம் செய்யவிருக்கும் பிரதம மந்திரியை சங்க வாசலில் அமைக்கப்படும் பந்தலில்வைத்து மல்லாகம் கிராம சபைத் தலைவரும், கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு வ பொன்னம்பலம் மலர்மாலை அணிந்து முதலில் வரவேற்பார். கூட்டுறவுத்துறை யாழ். மாவட்ட உயர்தர அதிகாரிகள், சங்கப் பிரதிநிதிகளும் பின்னர் பிரதமரையும், ஏனைய அமைச்சர்களையும் வரவேற்பர்.

பிரதமர் பின்பு கிராம வங்கி, இரும்பு கட்டிட உபகரண விற்பனவு நிலையம், புடைவை விற்பனை நிலையம், பாலர் பாடசாலை, பண்டக் சாலை, எரிபொருள் விற்பனை பகுதி, நெசவு நிலையம் போன்ற பகுதிகளை சென்று பார்வையிடுவார். தேநீர் விருந்துபசாரத்தையடுத்து பிரதமரை திரு. வ. பொன்னம்பலம் கூட்டுறவுச் சங்க சார்பில் வரவேற்று உபசாரப்பத்திரம் வழங்குவார்.

மல்லாகம் கிராம சபையின் தீர்மானத்திற்கு இணங்க பிரதம மந்திரி கூட்டுறவாளர் வீதியை திறந்து வைப்பார். அந்நேரம் பாடசாலை மாணவர்கள் அணிவகுப்பு, சாரணர் மரியாதை ஆகியன இடம்பெறும்.

0 0 0

## பொது வரவேற்பு அளிப்பர்

அல்லைப்பிட்டி, புதன்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தீவுப்பகுதித் தொகுதிக்கு தமிழரசுக்கட்சி சார்பாக போட்டியிடவிருக்கும் பண்டிதர் க பொ இரத்தினத்துக்கு வேலணை வங்களாவடி திறந்த வெளியரங்கில் இம்மாத மத்தியில் பொது வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. தமிழரசுக்கட்சி சகல ஆட்சிமன்றப் பிரதிநிதிகளும். செனட்டர்களும் இதில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

— —

# இ. தி. மு. க பற்றி ஐ.ஜி.பி.

கொழும்பு, புதன்

''இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மீது வழக்கு தொடரமுடியாதென்று அட்டோர்ணி ஜெனரல் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. அவரின் ஆலோசனையின்படி இ.தி மு.க. சம்பந்தமான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.'

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன இன்று நிருபர்கள் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## விமானநிலையத்தை வந்தடைவர்.

பலாலி விமான நிலையத்தில், பிரதமருக்கும், மந்திரிகளுக்கும் வரவேற்பளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வடபகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மேற்சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் உயர்தர அதிகாரிகள், காரியாதிகாரிகள், கிராம சேவகர்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் வரவேற்பார்கள்.

விவசாய சுற்றுலாவை மேற்கொள்ளும் பிரதமர் செல்லும் வழிகளில் பந்தல் போட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் செல்லும் பாதையில். தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

பிரதமர் வருகையையொட்டி, காங்கேசன்துறை விழாக்கோலம்பூண்டுள்ளது. துறைமுகத்திற்கு அண்மையில். அலங்காரபந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது.

காலை 8-15 மணிக்கு பிரதமர் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, 8-40 மணிக்கு யாழ்ப்பாணம் கிங்ஸ் கவுசைவந்தடைவார் மணிக்கு அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பிரதமர் செ வார், 4-45 மணிக்கு தொண்டமனறு கூலேரித்திட்ட பிரதேசத்திற்கு செல்வார், இரவு 7-15 மணிக்கு வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு செல்வார். மேற்படி சங்கம் பிரதமருக்கு விருந்துபசாரமளிக்கும்.

### பிரதமருக்கு ஜி. ஜி-விருந்து

பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் இம்மாதம் 6-ம் திகதி யாழ்ப்பாணம் எம். பி திரு ஜி ஜி பொன்னம்பலம் காங்கேசன்துறை கெஸ்ற் கவுஸில் நண்பகல் விருந்தளிப்பார்.


— —

## உபந்நியாசம்

உடுவில், வியாழன்

யாழ், மாவட்ட முருகன் ஆலயங்களில் ஷண்முகமூர்த்தியின் இலக்கணங்கள் குறித்து கந்த சஷ்டி பற்றிய ஆகமஉபந்நியாசங்களை உடுவில் வேதாகமசபை அதிபர் திரு. ஐ முத்துச்சாமிக்குருக்கள் நிகழ்த்திவருகிருர்.

# அப்பல்லோ-12 வீரர்கள்



சந்திரனை நோக்கி அப்பல்லோ 12-ல் புறப்படவிருக்கும் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களும் இங்கு காணப்படுகிருர்கள். (இடமிருந்து வலம்) அப்பல்லோ-12 கலத்தின் தளபதி சார்ள்ஸ் கொன்ருட் (இளவல்), தாய்க் கலத்தின் விமானி றிச்சாட் எஃப்கோர்டன் (இளவல்), சந்திரகலத்தின் விமானி எலன் எல். பீன். பின்னணியில் சந்திரகலத்தின் மாதிரி காணப்படுகின்றது.

ஆட்சிமன்ற பொதுக்குழு ஆராய்ந்தது பொதுக்குழுவின் கூட்டம் ஆட்சிமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது

### அசாதாரண சூழ்நிலை

ஆட்சிமன்றக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு திருமதி காந்தி இன்று காலை சுமார் 11 மணிக்கு முன்னர் வந்தார் அவரை அங்கத்தவர்கள் உற்சாகத்தோடு வரவேற்ருர்கள் திருமதிகாந்தி கூட்டத்தின் ஆரம்பத்தில் பேசும்போது அசாதாரணமான சூழ்நிலையில் நாம் கூடியிருக்கிருேம் என்ருர். தன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி எதுவும் கூறுவதற்குத் தர்ம் விரும்பவில்லை என்ருர். தனிநபர்களைப் பற்றிக் கவலையில்லை ஆனல் கட்சிக்கும் தேசத்துக்கும் கஷ்டம் நேரும் போது தாங்கமுடியாது என்ருர்

தேசப் பணியிலும் காங்கிரஸ் கட்சியிலும் தமது குடும்பத்தினருக்கு இருந்து வந்துள்ள பங்கை நினைவுறுத்திய பிரதமர் இந்திரா, காங்கிரசைத் தாம் வஞ்சித்துவிட்டதாகக் கூறப்படுய்ததுஇதிலும்இருவர் இந்தத் தீர்மானத்தை எதிர்த்ததாகத்தெரிகிறது என்ருர்

திருபக்ருதீன் அலிஅகமத் பேசுகையில், காரியக்கமிட்டியில் திருமதி காந்திமீது நடவடிக்கை எடுக்கும் முன்னர் அதுபற்றி ஆட்சிமன்றக் குழுவுக்கு அறிவித்திருக்க வேண்டும் என்ருர்

### சின்ஹா கைதானுர்

ஆட்சிமன்றக் கூட்டத்துக்கு முன்னல் திருமதி இந்திராகாந்தியை ஆதரித்து பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று கருதி லோகசபா அங்கத்தவர் திருமதி தாரகேசரி சின்ஹாவை பொலிசார் கைதுசெய்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள் திருமதி காந்திக்கு ஆதரவாக கோஷங்கள் கிளம்பியபோது திருமதி சின்ஹா கூட்டத்தை நோக்கிச் சென்ருர் அப்பொழுது பொலிசார் அவரைக் கைது செய்தனர் திருமதிசின்ஹா தம்மை ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் கன்னத்தில் அறைந்ததாக அவர் நிருபர்களிடம் கூறினுர்

# அடுத்த மாதம் ஜே. ஆர். உடுப்பிட்டிக்கு விஜயம்

பருத்தித்துறை, வியா

உடுப்பிட்டித் தொகுதியில் குருகுலத்தவருக்கென அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டதிற் கட்டப்பட்ட புதியவீடுகளைத் திறந்து வைப்பதற்கு ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்தன அடுத்த மாத முதல்வாரத்தில் உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம் செய்ய விருக்கிருர்.

ஏறக்குறைய ரூபா 90,000 செலவில் அம்பலன் வெளியிற் கட்டப்பட்டுள்ள வீடுகளில் சாதாரண அத்தியாவசிய வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளதுடன் கிணறு, மலசல கூடங்களும் கட்டப்பட்டுள்ளன, சுமார் 30 குடும்பங்கள் நிலமற்ற காரணத்தால் இங்கு குடியேற்றப் படவுள்ளனர். உடுப்பிட்டி எம் பியும் உபசபாநாயகருமான திரு எம் சிவசிதம்பரம் அமைச்சரை வரவேற்பதுடன் தொகுதியின் பலதரப் பட்ட பிரச்னைகளையும் விளக்குவாரெனவும் தெரிகிறது. திறப்பு விழாவைத் தொடர்ந்து பொதுக் கூட்டமொன்றும் நடைபெறவிருக்கிறது

# பொலிஸ் காவலுடன் தமிழ்ப்படம்

கொழும்பு, புதன்

அநுராதபுரத்தில் உள்ள தியேட்டர்களில் தமிழ்ப் படங்கள் இப்போது பொலிஸ் காவலுடன் காண்பிக்கப்படுகின்றன. முன்னர் நடந்த அசம்பாவித நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எம். ஜி. ஆர். நடித்த காஞ்சித் தலைவன் பொலிஸ் காவலுடன் ஓடிக்கெகண்டிருக்கிறது.

— —

கொழும்பு, புதன்

கொலையில் சென்ற ஆண்டைவிட இந்தஆண்டு மிஞ்சுகிறது.

அக்டோபர் வரை 10 மாதங்களில் இவ்வாண்டு நடந்த கொலைகள் 683 என கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற வருடம் பத்து மாதங்களில் நடந்தகொலைகள் மேற்படி தொகையைவிட 77 குறைவாகவுள்ளது.

இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் இரட்டைகொலை ஒன்று உட்பட 65 கொலைகள் நடைபெற்றுள்ளன. 27 தற்கொலைகள்சென்றமாதத்தில் நடந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு தியேட்டருக்கு காஷியர், புக்கிங் கிளார்க், உதவி மனேஜர் தேவை. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மனுச்செய்யவும். விளம்பர இல: 1539, C/O 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1539

### விற்பனைக்கு

காணி:

கொட்டடி சீனிவாசகம் வீதியில் 3 1/4 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: 42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் 1543

பரந்தனிலுள்ள 7 1/2 ஏக்கர் மானவரி நெற்காணி விற்பனைக்குண்டு. ஏக்கர் ஒன்று ரூபா 1500/- விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். அமிர்தாயன சிவம், நம். 7, கண்டி ரோட், பரந்தன். 154 4

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி முத்துராமன் - வாணிஸ்ரீ நடித்த


# குலவிளக்கு

யாழ். வெலிங்டன்

மற்றும்

6 சினிமாஸ் திரைகளில்

இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ ★ சிவாஜி கணேசன்　நாட்டியப் பேரொளி ★ பத்மினி

காதல் ராணி ★ கே. ஆர். விஜயா　ஹாஸ்ய மன்னன் ★ நாகேஷ்

★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி

மற்றும் பலர் திறம்பட நடித்த

கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் ஏ பீம்சிங்　பாடல் கண்ணதாசன்　இசையமைப்பு கே. வி. மகாதேவன்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 14—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணோிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமியப் பாடல்கள், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 நிலைய ஒலிப்பதிவு, 7-35 மத்தாப்பு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

சனி போயா, போயா 2-30 மணி

சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த

நெஞ்சிருக்கும் வரை

வல்வெட்டித்துறை

றஞ்சனா தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.

சுந்தரராஜன். - பத்மினி பேபிராணி நடித்த

குழந்தைக்காக

ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி: 6-30, 9-30

சனி போயா, போயா 2-30 மணி

ஆதித்தன்—வசந்தா நடித்த

விளக்கேற்றியவள்

## இடமாற்றம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் கிராமசபையில் லிகிதராகக் கடமையாற்றிப் பதவி உயர்வுடன் பேசாலை கிராமசபைக்கு மாற்றம் செய்யப்பட்ட திரு. ச. பரமானந்தன் மீண்டும் கொக்குவில் கிராமசபைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

MANOHARA

JAFFNA

Daily 4-45, 7&9-45, P. M.

SEXY ALNEON

(Strictly for adults)

## திருடினாராம்

மல்லாகம், வியாழன்

கைக்கடிகாரம் திருட்டுச் சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஆஜராக்கப்பட்ட பி. ஏகாம்பரம் என்ற சுமார் 20 வயதானவாலிபரை மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி விளக்கமறியலில் வைத்துள்ளார். பிரஸ்தாப சந்தேகநபருக்கு எதிராக களவுகுற்றம் சுமத்தி சங்கானைப் பொலிசார் இம்மாதம் 14ம் திகதி வழக்கு தாககல் செய்வர் எனத் தெரிகிறது

### பகிரங்க ஏல விற்பனவு

உடுப்பிட்டி கி. ச. பகுதி ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு சொந்தமான 22 ஸ்ரீ 3769 இலக்க ஒஸ்ரின் லொறி 23-11-69 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். 12-11-69 தொடக்கம் 21-11-69 மாலை 4 மணி வரை லொறியை மேற்படி சமாசத்தில் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். கேள்வியில் லொறி பெற்றவர் உடனடியாக 50 வீதப் பணத்தை ரொக்கமாக மேற்படி சமாசத்தில் கட்ட வேண்டும் மிகுதி 50 வீதப் பணத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்பு மேற்படி சமாசத்தில் ரொக்கமாகக் கட்டி லொறியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

1818　பொ. கணபதிப்பிள்ளை. தலைவர்

ராஜா — யாழ்ப்பாணம்

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி

போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம் காலை 10-30 மணி

✻ ஜெய்சங்கர் ✻ விஜயகுமாரி

முத்துராமன், வாணிஸ்ரீ, நாகேஷ் நடித்த

# டீச்சரம்மா

REGAL (JAFFNA)

Daily 10-30 a. m. 3, 7 & 10-00 p. m.

Lee Marvin Ernest Borgnine

in

M. G. M's

# THE DIRTY DOZEN

(Adults)

முக்கிய கவனிப்பு

சினிமா ரசிகர்களுக்கெனவே ரீகல் ஸ்தாபனத்தாரால் அமெரிக்காவிலிருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட அரியதோர் சித்திரம்.

# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

பட்டுமழையின் ... விஜயம் !

தென்னகத் திரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜன வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவில் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில், யாழ் மத்திய கல்லூரியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது. ராஜசிங்கம் இரு கோல்களையும் ஜெகநாதன் ஒரு கோலையும் போட்டார். மகாஜனக் கோஷ்டியின் காப்டன் மோகனராமின் விளையாட்டு சிறப்பாக இருந்தது இப்போட்டிக்கு திரு ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்:

மகாஜனக் கல்லூரிக்கும், உடும்பராய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே நி)

## இளைஞர் மரணம்

முசலி, வியாழன்

வங்காலையைச் சேர்ந்த பத்தொன்பது வயதுள்ள திரு. சூசையப்பு ஆனந்தம் மார்க் என்ற இளைஞர் வயலில் பூச்சிகளுக்கு கிருமி நாசினி அடிக்கும்போது திடீரென மயக்கமுற்ற நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

## வடிசாராயம் வழக்குகள்

### நால்வருக்கு அபராதம்

மல்லாகம், வியாழன்

இளவாலை வாசிகளான பொன்னம்பலம், சின்னப்பு ஆகிய இருவரும் தமது வீட்டில் சட்டவிரோத வடிசாராயம், வடித்தது வடிப்பதற்கான உபகரணங்கள், வடிசாராயம், கோடா வைத்திருந்தது என்ற குற்றச்சாட்டுக்களில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசாமி இருவருக்கும் தலா 380 ரூபா அபராதம் விதித்தார் சங்கானைப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

காங்கேசன்துறைப் பொலிசார் வசாவிளான் மேற்கைச் சேர்ந்த எம். வல்லிபுரம் என்பவர் மேல் சட்டவிரோத வடிசாராயம் வடித்தது உபகரணங்கள் வைத்திருந்தது போன்ற குற்றச்சாட்டுகளில் தொடர்ந்திருந்த வழக்கில் எதிரிக்கு ரூபா 250 அபராதம் விதிக்கப்பட்டது.

நாகன் மாணிக்கம் என்ற மற்றொரு நபர் மீது கலால் பகுதியினர் வடிசாராயம் வடித்தது, வைத்திருந்தது என்ற குற்றச்சாட்டில் தொடர்ந்திருந்த வழக்கில் எதிரி ரூபா 230 குற்றப்பணம் செலுத்ினார்.

'தேவை-முகாமையாளர்

வல்வை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், வல்வெட்டித்துறை

மேற்படி பதவிக்குப் பின் கூறப்படும் தகைமைகளும், பிணைகளுமுடையோர் 20-11-1969-ம் திகதிக்குப் பிந்தாது செயலாளருக்குப் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

நேர்முகப் பரீட்சைக்கு 23-11-1969 இல் காலை 9-30 மணிக்குச் சங்கத்தின் கடையிற் பிரசன்னமாக வேண்டும்.

சம்பளம்: மாதம் ரூ. 150/-

தகைமைகள்:

1. வயது 25 க்கும் 35 க்கும் இடைப்பட்டவர்.
2. இலங்கைப்பிரஜை.
3. கூட்டுறவுப் பயிற்சித் தராதரமுள்ளவர்.
4. கல்விப் பொதுத்தராதரப் பத்திரமுடையவர்.
5. இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்.

வேறு கூட்டுறவுச் சங்கத்தில் ஊழியம் செய்பவராயின் சங்கத் தலைவரிடமிருந்து இவற்றில் ஒரு நற்சாட்சிப்பத்திரம்.'

பிணைகள்

1. ரொக்கம் ரூ. 2000-00
2. ஆதனம் ரூ. 3000-00

இப்படிக்கு

ச சத்தியமூர்த்தி.

1820　செயலாளர்

புத்தூர், வியாழன்

பரமேஸ்வராக் கல்லூரிக் கோஷ்டிக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்குமிடையே யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பரமேஸ்வராக் கல்லூரி 3 கோலைப் பெற்று, 3-வதுபிரிவுச்சாம்பியனானது



டைரக்ஷன் ஏ பீம்சிங் | பாடல் கண்ணதாசன் | இசையமைப்பு கே. வி. மகாதேவன்

ஆதித்தன்—வசந்தா
நடித்த
விளக்கேற்றியவள்




# ராணிக்கு ஒரு தோழி!

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

**ராணி** சந்தன சோப், சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்
சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.

## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
பட்டுமாமியின் யாழ்ப்பாண விஜயம்!

தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கலாகேந்திராவின்

# எதிர்நீச்சல்

கதை, வசனம் டைரக்ஷன்
கே. பாலசந்தர்

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 29 ந் திகதி (14-11-69)
சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும். சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

**ரிஷபம்-** உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**மிதுனம்-** பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். சுற்றுடலிலும் வேண்டியதை சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும். இன்று பொன் நாள்.

**கடகம்-** குடும்பத்தில் குறை கேட்க நேரிடும், மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படும். பொறுமையுடன் நடப்பது நன்று.

**சிம்மம்-** மனம்போல்வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடம் உண்டு. முயற்சியால் முன்னேற்றமும் உண்டு.

**கன்னி-** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு. புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருத்தப்படலாம். பண பலமும் உண்டு.

**துலாம்-** வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.


**விருச்சிகம்-** துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

**தனுசு-** அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக் கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அமைதி நன்று.

**மகரம்-** பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம். சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும். புது வழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு.


**கும்பம்-** மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள். தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறும். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

**மீனம்-** மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள். பயன்தரும்பிரயாணம் ஒன்றுமேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவழி நாட்டம் உண்டு.



## எளில் மிகு
# கோயா
## வாசனைப்பவுடர் பாவித்து ஒய்யார மாதராய்த் திகழுங்கள்.

கோயா — உலகின் மதிமிகு செழுமைப் பவுடர் - உங்களை அரவணைக்கையில் வாசனையூட்டவல்லது. தன் இனிமை - நயத்தால் உங்களைக் காத்தணைத்து நாள் முழுவதும் சுகந்த மலர்ச்சியுடன் விளங்க வைக்கும். மற்றெல்லாப் பவுடர்களையும் விட அதி மிருதுவானது, மென்மைப்பட்டினைப் போன்றது. பரிவசமூட்டும் நறுமணம் கொண்ட கோயா வாசனை நிறைந்தது. அழகு உருவில் உங்களை ஆழ்த்தவல்லது. செல்லுமிடமெல்லாம் இன்னயம் பொலிந்து, உன்னத ஆடவரை தன்னயம் இழக்கச் செய்வீர்கள்
பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின்
கோயா, உலகின் எளில் மிகு நவநாகரிக நளின் நங்கையரால் விரும்பிப் பாவிக்கப்படுகிறது
என்டைஸ், கார்டீனியா, வைல்(ட்)சில்க், லவ் அவ்பயர், பிளக்றோஸ், நம:-5, ஆகியவற்றிலிருந்து உங்கள் அபிமான பவுடரைத் தேர்ந்தெடுங்கள்.




இவற்றுக்கிணைய கோயா சோப்களும் உள.

**கோயா** பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின் நவநாகரீக நங்கையரால் பாவிக்கப்படும் செழுமைப் பவுடர் உங்களையும் எளில் மிகு நளின் நங்கையராக்கட்டும்.

இப்பொழுது புதிய
நெடும் அழகு டின்களில் கோயா பவுடர் கிடைக்கிறது. விலையில் மாற்றமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதிகாந்தியை

# பிரதமர் பதவியிலிருந்து அகற்ற முடியாது?

## காரியக்கமிட்டி செய்தமுடிவுக்கு எம். பி. க்கள் எதிர்ப்பு

புதுடில்லி, நவம்பர் 12

**காங்கிரஸ் கட்சியிலிருந்து திருமதி இந்திரா காந்தியை விலக்கிவிடுவதென்று திரு. நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவுசெய்தபோதிலும் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவில் திருமதி காந்திக்குப் பூரண ஆதரவும் நம்பிக்கையும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.**

நேற்றிரவு திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் விடுத்த ஓர் அறிக்கையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்களின் பெரும்பான்மை ஆதரவு திருமதி காந்திக்கு இருப்பதாகவும் ஆட்சிமன்றக் குழுவிலும் பூரண ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர் காரியக் கமிட்டியினர் எடுத்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்றும் திருமதி காந்தி காங்கிரசில் தொடர்ந்து இருந்துவருகிறார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழுவைச் சேர்ந்த 160 பேர் கூடி ஏகமனதாக வெளியிட்ட ஓர் அறிக்கையில் காரியக்கமிட்டியின் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். திருமதி காந்திஆட்சிமன்றக் குழுவின் பூரண நம்பிக்கையைப் பெற்றிருக்கிறுரென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனல் 12 ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட இன்னெரு அறிக்கையில் காரியக்கமிட்டியினர் திருமதி காந்திக்கெதிராக எடுத்துள்ள நடவடிக்கையை ஆதரித்துள்ளனர்.

திருமதி காந்தியை கட்சியிலிருந்து விலக்கியதை பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பல்வேறு காரணங்களுக்காக வரவேற்றிருக்கின்றனர்.

இன்று திருமதி இந்திரா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்படி காரியக்கமிட்டி உத்தரவிட்டிருப்பதால் இந்தக்கூட்டம் பரபரப்பானசூழ்நிலையில் நடைபெறும் என்று கருதப்படுகின்றது.

இன்று நடைபெறவிருந்த ஆட்சிமன்றக் குழுவின் கூட்டத்தை ரத்துசெய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாகவும் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

இன்று நடைபெறும் ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்திற்குப் பிரதம மந்திரியே தலைமைவகிப்பார். அவர் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக ஆட்சிமன்றக்குழுவின் உப தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். எம். மிஸ்ரா சுற்றறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். இந்தச் சுற்றுநிருபம் விஷமத்தனமானது என்று குழுவின் இன்னெரு உப தலைவரான திரு. விபூதி மிஸ்ரா அறிவித்திருக்கிறுர்.

காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவுக்கு வேறெரு தலைவரைத் தெரிவுசெய்யும்படி காங்கிரஸ் காரியக்கமிட்டி விடுத்திருக்கும் கட்டளை இன்று மீறப்படுமானல் சின்டிக்கேட் சார்பான ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வெளியேறக்கூடுமென்று கருதப்படுகின்றது.

அவ்வாறு நடக்குமானல் ஆட்சிமன்றத்தில் அவருக்கு கம்யூனிஸ்ட், தி. மு. க. போன்ற சோஷலிஸ்ட் கட்சிகளின் ஆதரவு கிடைக்கக் கூடுமென்றும் கருதப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து திருமதி காந்தி விலக்கப்பட்டது மிகவும் துரதிருஷ்டகரமானது என்று பல தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறுர்கள்.

திருமதி காந்தி இனிமேலும் ஆட்சிமன்றத்தில் பிரதமராக இருப்பதற்கு அருகதை கிடையாது என்று சுதந்திரா தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஆட்சிமன்றத்தில்பிரதமர் இந்திராகாந்தியின் வெளிநாட்டுக் கொள்கைமீது தாக்கம்செய்யப்படும் நம்பிக்கையில்லாப்பிரேரணைகளை சுதந்திரக்கட்சி ஆதரிக்க விருக்கின்றது. ரபாத் மாநாடு சம்பந்தமாக இந்திரா அரசின் மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையொன்றை ஜனசங்கட்சியினர் கொண்டுவரவிருக்கின்றனர்.

சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சியின் தலைவர் திரு ராஜ் நாராயணன் திருமதிகாந்தி ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருக்கிறுர்.

நாடு பூராவிலும் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. சென்னையில் காங்கிரஸ்கட்சி உட்பட

## களை பிடிங்கினர்

புத்தூர், வியாழன்

பரமேஸ்வராக்கல்லூரியைச்சேர்ந்த சுமார் 200 மாணவர்கள் முரசுமோட்டைப்பகுதியில் எட்டு ஆசிரியர்கள் தலைமையில் களை பிடுங்கினர்.



## ‘அன்பென்னும் ஆயுதத்தால் சுதந்திரத்தைப் பெற்றுர்’

முசலி, வியாழன்

''ஜெர்மனி தேசம் சிதறுண்டு சின்னுபின்னமாகச் சிறு சிறு சிற்றரசுகளாய் காணப்பட்ட நேரத்தில் இரத்தப் போரினல் ஜெர்மனி தேசத்தை உருவாக்கினன் இரும்பு மனிதன் பிஸ்மார்க். உலக வல்லரசுகளெல்லாம் தனது காலடியில் வந்து விழவேண்டுமென்று அல்லும் பகலும் இரத்தப்போர் செய்து, பிரான்ஸ் நாட்டை உலக நாடுகளில் முதல் ஸ்தானத்துக்குக் கொண்டுவந்தான், நெப்போலியன் ஆனல் ஆசிய நாடுதந்த தியாகச் சின்னம், அன்பின் சொருபம், அகிம்சையின் அணையா விளக்கு என்று கூறப்படும் அண்ணல் காந்தி, ஏகாதிபத்திய வெறிகொண்ட வெள்ளையனிடம் அன்பென்னும் ஆயுதத்தால், கத்தியின்றி யுத்தமின்றி இரத்தக்களரியின்றி இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற்றுர்.''

மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் மன்னர் மாவட்டத்தினரால் கொண்டாடப்பட்ட காந்தி நூற்றுண்டு விழாவின்போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்விழா மன்னர் புனித சவேரியார் கல்லூரியில் நடைபெற்றது.

மற்றும் மன்னர் எம். பி. திரு. வீ. ஏ. அழகக்கோன் மன்னர் பட்டினசபை முதல்வர் ஜனுப் எம். எஸ். ஏ. றகீம் வண: பிதா மைக்கேல் சாமி, முசலிக்காரியாதிகாரி திரு [illegible] உட்பட [illegible] ஞர்கள்.

விழாமுடிவில் புனிதசவேரி இசைநிகழ்ச்சிஇடம்பெற்றன

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை மன்னர் மாவட்ட தலைமை நிலையக் காரியாதிகாரி திரு: கா. மாணிக்கவாசகர் செய்திருந்தார்.

# திட்டமிட்டபடி அப்பல்லோ-12 இன்று செலுத்தப்படும்?

ஹூஸ்டன், நவ. 13

**நாளைய தினம் கென்னடி முனையிலிருந்து அப்பல்லோ-12 விண்கலம் சந்திரனை நோக்கி திட்டமிட்டபடி செலுத்தப்படும் என்று இப்பொழுது அறிவிக்கப்படுகின்றது.**

அப்பல்லோ-12ல் ஒரு யந்திரப்பகுதி சேதமடைந்திருப்பது நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் திருத்துவதற்கு பல நாட்கள் எடுக்கும் என்றும் அதனல் அதனைச் செலுத்தும் திகதி பின்போடப்படலாம் என்றும் கருதப்பட்டது. ஆனல் ஹூஸ்டனிலுள்ள வஞ்ஞானிகள் அப்பல்லோ 12ல் சேதமுற்றுள்ள பாகத்தை அபபுறப்படுத்திவிட்டு அதற்குப் பதில் அப்பல்லோ 13ல் உள்ள பாகத்தைப் பொருத்தி திட்டமிட்டபடி நாளை இரவு இதனை விண்வெளிக்கு அனுப்புவதென்று முடிவு செய்திருக்கிறுர்கள்.

## ‘கல்விக் கூடங்களில் பலப்பரீட்சை வேண்டாம்’

பருத்தித்துறை, வியா

''இன்றைய மாணவரிடையே சோம்பல், ஊக்கமின்மை, அலட்சிய மனேபாவம்ஆகியன மலிந்துகாணப்படுகின்றன. இந் நிலைக்குச் சமுதாயத்திற் காணப்படும் சக்திகளே காரணமாக இருப்பினும் பாடசாலைகள் அத்தீய சக்திகளை எதிர்த்து மாணவரின் எதிர்கால சுபீட்சத்துக்கு வழி வகுக்க வேண்டியது அவசியம் அதே நேரத்தில் கல்லூரிகளோ பல்கலைக்கழகங்களோ பலப்பரீட்சைகளுக்கான ஸ்தாபனங்களாகக் கருதாது அவற்றின் முழுப்பயனையும் மாணவர் அனுபவிக்க வேண்டியது அவர்களின் தலையாய கடனுகும்.''

இவ்வாறு வடபகுதி கல்வியதிகாரி திருமதி ஆர் எஸ் பாமர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷின் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் வருடாந்த இராப்போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றும் போது கூறினர். திரு எஸ் ஜெயவீரசிங்கம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு ராஜன் கதிர்காமர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ் கதிர்காமத்தம்பி, கல்லூரி அதிபர் திரு எஸ் செல்வத்துரைஆகியோரும் உரைநிகழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டிக்கையை ஆதரித்துள்ளனர்.

திருமதி காந்தியை கட்சியிலிருந்து விலக்கியதை பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பல்வேறு காரணங்களுக்காக வரவேற்றிருக்கின்றனர்.

இன்று திருமதி இந்திரா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழு கூடவிருக்கின்றது.

ஆட்சிமன்றக் குழுவுக்கு வேறு ஒரு தலைவரைத் தெரிவுசெய்யும்படி காங்கிரஸ் காரியக்கமிட்டி விடுத்திருக்கும் கட்டளை இன்று மீறப்படுமானல் சின்டிக்கேட் சார்பான ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வெளியேறக்கூடுமென்று கருதப்படுகின்றது.

அவ்வாறு நடக்குமானல் பிரதம மந்திரி தமது ஆதரவாளர்களோடு தனிக்குழுவாக இயங்கக்கூடுமென்றும் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருக்கிறர்.

நாடு பூராவிலும் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. சென்னையில் காங்கிரஸ்கட்சி உட்பட மற்ற எதிர்க்கட்சிகளும் ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளது.

திரு. வீ. ஏ. அழகக்கோன் மன்ஞர் பட்டினசபை முதல்வர் ஜனப் எம். எஸ். ஏ. றகீம் வண. பிதா மைக்கேல்சாமி, முசலிக்காரியாதிகாரி திரு வை. சொக்கலிங்கம் உட்படப்பலர் உரையாற்றினர்கள்.

விழாமுடிவில் புனிதசவேரியார், ஆண் பாடசாலையினராலும், பெண்பாடசாலையினராலும் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவ மாணவிகளாலும், அல், அசார், மகாவித்தியாலய மாணவ மாணவிகளாலும்,

## சிண்டிகேட் குழுவினர்

# இந்திராவுக்கு எதிராக பிரசாரம் நடத்துவர்

புதுடில்லி, நவ. 13

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியினுல் நடாத்தப்படவுள்ள போட்டிக் காங்கிரஸ் கூட்டத்தை எதிர்த்து இந்தியா முழுவதும் பிரசாரம் செய்ய சின்டிக்கேட்டினர் முடிவு செய்துள்ளனர்.

நிஜலிங்கப்பாவுக்குப் பதில் புதிய தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று இந்திரா ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்ததும் அதை நிஜலிங்கப்பா மறுத்ததும் நினைவிருக்கலாம். எனவே தான் இந்திரா ஆதரவாளர்கள் இம்மாதம் 22, 23-ந் திகதிகளில் கூட்டத்தை கூட்டுகிறர்கள்.

இந்தியா முழுவதும் இந்திராவின் கூட்டத்தை எதிர்த்து எப்படி பிரசாரம் செய்வதென ஆராய நிஜலிங்கப்பா வீட்டில் கூட்டம் நடைபெற்றது.

### சட்டவிரோதமானது

''இந்திராவின் கூட்டம் சட்டவிரோதமானது. அதில் கலந்துகொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சின்டிக்கேட்டினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

பிரதமர் இந்திராகாந்தி கூட்டும் மகாநாட்டில் கலந்து கொள்ளப்போவதாக தமிழ்நாடு முன்னைநாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தெரிவித்துள்ளார். இந்திராவுக்கு இந்தியா முழுவதிலும் ஆதரவு திரண்டு வருகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் பெரும் ஆதரவு அவருக்கு உள்ளது என்று பக்தவத்சலம் கூறினர்.

சின்டிக்கேட் தலைவர்களுக்குப் போட்டியாக திருமதி இந்திரா காந்தி இம்மாதம் 22, 23-ம் திகதிகளில் புதுடில்லியில் கூட்டும் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில், தமிழ் நாட்டைச் சேர்ந்த அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர்கள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி தடை விதித்துள்ளது. ஆனல் அதை மீறி அம்மாநாட்டில் கலந்து கொள்ள இந்திரா ஆதரவாளர்களை முன்னைநாள் தமிழ் நாடுகாங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. சி, சுப்பிரமணியம் திரட்டி வருகிறர்.

திருப்பதியில்

## படத்திற்குப் பூசைபோடத்தடை

சென்னை, நவ 13

என் டி ராமராவ், சாவித்திரி நடித்த 'மாத்ருதேவா' என்ற படத்தை வெளியிடுவதற்கு முன்பாக அப்படரீல்ஸுகள் கொண்ட பெட்டிக்கு திருப்பதி கோவிலில் பூசை போடுவதற்கா சாவித்திரி எடுத்துச் சென்றபோது கோவில் நிர்வாகம் பூசை போட மறுத்துவிட்டது.

இது வரை காலமும் பூசை போடும் வழக்கம்இருந்ததாயினும்கடந்தமாதம்4ம்தேதி முதல் பூசை போடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

## 25 உயிர்கள் பலி

பருத்தித்துறை, வியா.

25 உயிர்கள் கிருமி நாசினிக்குப்பலியான பரிதாப சம்பவமொன்று வதிரி என்னும் கிராமத்தில் நேற்றிரவு நடைபெற்றது. ஓர் ஆசிரியருக்குச்சொந்தமான 25 மேனட்டுக்கோழிகள் கிருமிநாசினி கலந்தஉணவை உண்டதால் காலையில் இறந்து கிடக்கக்காணப்பட்டன.


## குப்பிளான் கொலைவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மல்லாகம், வியாழன்

குப்பிளான் கொலைவழக்கு தொடர்ந்து மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ். மாவட்ட சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பாலசிங்கம் சாட்சியமளித்தார். இறந்தவரின் உடலைப் பரிசோதனை நடாத்திய டாக்டர் பாலசிங்கம் எதிரிதரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். எதிரியை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதல் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்,

குப்பிளானைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் என்பவரைக் கொலைசெய்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த சுப்பையா அருணசலம் என்பவர் மீது சுன்னுகம் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

எதிரிதரப்பில் அட்வகேட் ஆர் ஈ. தம்பிரத்தினம் புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் உதவியுடன் ஆஜராஞர்.



சங்கானை வலி-மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மின்தறி இயங்கிக்கொண்டிருக்கிறது. சாறிகள், ரவுக்கை துணிகள், பட்டுவேட்டி-சால்வைகள், காற்சட்டைத் துணிகள் ஆகியவற்றை நம்மவர்கள் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர்.




## நத்தார் பண்டிகை வரப்போகிறது

டிசெம்பர் மாதம் ''இம்'' மென்னு முன்னே பறந்துவிடும் தன்மையுடையதென்பதை நாம் அறிவோம். உங்கள் மனைக்குப் புதிய சோடினைகள், சோடினைச் சேலைகள்....மாட்ட வேண்டிய காலம் இதுவே. அவற்ருேடு இசையக்கூடிய உட்புற, வெளிப்புற வண்ண வேலைப்பாடுகளையும் இப்பொழுதே கவனித்துக் கொள்ளவேண்டும். பேஸ்டல் நிறங்கள் அல்லது கலகலப்பான சூழலை உருவாக்கும் நிறங்களைத் தெரிவு செய்யுங்கள். உங்கள் ரசானுபவத்தின்படி வெகு பிரியமான நிறங்களையோ பிரகாசமான நிறங்களையோ தேர்ந்தெடுத்து பண்டிகைக்காலத்தின் ஜீவத்துடிப்பைச் சிறைப்பிடியுங்கள். மீதியை ரோபியாலக் கவனித்துக்கொள்ளும் இந்த நத்தாருக்கு உங்கள் வீட்டில் ஜீவகளை ததும்பச்செய்யுங்கள். ரோபியலக் கொண்டு கோலாகலமான, பிரகாசமான, ஜீவத்துடிப்புடைய வாழ்க்கையை ஆரம்பிக்க இதுவே தருணம்.

# ROBBIALAC

## ரோபியலக்

உலகில் நல்ல வடிவான நிறங்கள்

பெயின்டுகளில் உலக  முன்னணிவகிப்பது


## சிலோன் பெயின்ட் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

'எல்லா மதங்களிலும் இறைவனைக் காணும் வழிவகை உள்ளன, எனவே அவரவரின் மதக் கொள்கைப்படி கடவுளை வழிபடுவதே சிறந்தது. —மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 29-ந் திகதி (14-11-69)


## இந்தியாவின் அரசியல்—3

இன்று ஜவகர்லால் நேருவின் 8-வது ஜயந்தி விழா நடைபெறுகிறது இச் சமயத்தில் அவரது அருமைப் புதல்வியான பிரதமர் இந்திராகாந்தியை இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி காங்கிரஸிலிருந்து நீக்கியுள்ளது. என்னேவிதியின் விளையாட்டு! இதுபற்றி நேரு அவர்களின் ஆத்மாவுக்கு எப்படியிருக்குமோ?

நாட்டின் விடுதலைக்காக பிரதமர் இந்திராகாந்தி உள்ளிட்டு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலுள்ள எல்லாத் தலைவர்களும் மகாத்மாவின் தலைமையில் அரும்பெரும் தியாகம் செய்தவர்கள். நாட்டின் ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும் பெரிதும் அக்கறை கொண்ட உண்மையான தேசாபிமானிகள். காங்கிரஸ் ஸ்தாபனம் பிளவுபட்டு 'தற்கொலை' செய்து கொள்ளுவதைப்பற்றி பிரதமர் இந்திராகாந்தி உள்ளிட்டு அக்கட்சித் தலைவர்கள் யாருக்கும் மகிழ்ச்சியோ பெருமையோ இராது. கருத்து வேற்றுமை காரணமாகவே இந்த நெருக்கடி ஏற்பட்டு நடக்கக்கூடாதது நடந்துவிட்டது.

அரசியலிலே கருத்து வேற்றுமை ஏற்படுவது புதிதல்ல. கட்சியின் நன்மையையும் நாட்டின் நன்மையையும் கருதி இருதரப்பினரும் பிடிவாதம் காட்டாமல் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தால்தான் அரசியல் தேர் சீராக ஓடமுடியும். மிகுந்த அனுபவமும் தியாகபுத்தியுமுள்ள பெரிய தலைவர்களே விட்டுக்கொடுத்து சமரச முடிவு செய்ய முடியாமற் போனது ஒரு பெரிய துரதிருஷ்டமே, அரும்பாடுபட்டுக் கிடைத்த இந்திய அரசியல் சுதந்திரத்துக்கு இன்று பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தை தவிர்க்க வழி இல்லையா? மனமுண்டானுல் நிச்சயம் வழி உண்டு.

இந்திய ஜனதிபதியின் தேர்தலை முன்னிட்டுத்தான் காங்கிரஸுக்குள் பெரும் பிளவுஏற்பட்டது. சஞ்சீவி

கியதாலேயே இன்று காங்கிரசிலிருந்து இந்திராகாந்தி விலக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தேசாயைமீண்டும் உதவிப் பிரதமராக நியமித்திருப்பின் இந்த அரசியல் நெருக்கடியே சுமுகமாக தீர்ந்து சமரசம் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனுல் பிரதமர் இந்திரா இதற்குச் சம்மதிக்கவில்லை. தமக்குப் பூரண நம்பிக்கையுள்ளவர்களையே, தம்முடன் பூரணமாக ஒத்துழைக்கக்கூடியவர்களையே பிரதமர் தமது மந்திரிச்சபையில் நியமித்துக் கொள்வது இயற்கை. இதற்கான அதிகாரமும் உரிமையும்அவருக்குண்டு. இவ்விஷயத்தில் எக்காரணம் பற்றியும் பிறர் தலையிட்டுக் கட்டாயம் செய்ய முடியாது. நாட்டு ஆட்சியே இதனுல் சீர்குலையக்கூடும்

இந்த நெருக்கடி இந்தியாவுக்குப் பெரிய சோதனையே. என்றுலும் இதில் சம்பந்தப்பட்ட தலைவர்கள்பலரும் பதவிக்கோ அதிகாரத்துக்கோ ஆசைப்பட்டவர்களல்லர். தியாக சீலர்களான அவர்கள் இதனுல் நாட்டுக்கு எவ்விதத்திலும் தீங்கேற்பட அனுமதிக்க மாட்டார்கள். மேலும காங்கிரஸ் பிளவு படுவது இது முதல்தடவையல்ல, தேச பந்துஸி, ஆர்காஸ் காலத்திலும் காங்கிரஸ் பிளவுபட்டது. மகாத்மாவும் அவரது சகாக்களும் சட்டசபைப்பிரவேசத்துக்குமாறாக இருக்கையில் ஸி, ஆர், தாஸ் மோதிலால் நேரு முதலிய தலைவர்கள் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்து சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்தினர். என்றுலும் பிறகு நாட்டின் பொதுநன்மைக்காக இருசார்பினரும் சேர்ந்து விட்டது குறிப்பிடத் தக்கது.

இந்தியா அரசியல் விடுதலை பெற்றுலும் இன்னும் பொருளாதார விடுதலையைப் பெறவில்லை உள்நாட்டு வெளிநாட்டு ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன, இந் நிலையில் தேசாபிமானிகளான தலைவர்களுக்கு சிற்சில வேற்றுமைகள்ஏறபட்டா

# உலக வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றவர்

## இன்று நேரு பிறந்தநாள்

**1947-ல் இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் பிரதமராகவிருந்து நாட்டின் சுதந்திரத்தையும் காங்கிரஸ்கட்சியையும் கட்டிக் காத்த ஜவர்கர்லால் நேருவின் 80-வது பிறந்ததினமான இன்று அவரை நினைவுகூருமுகமாக இக் கட்டுரை வெளியாகிறது.**

இந்திய வரலாற்றில்மட்டுமன்றி உலக வரலாற்றிலும் தனக்கென ஒரு தனி இடத்தைப்பிடித்துக்கொண்டவர் காலஞ் சென்ற பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு. அவரது 80 வருட (1889-1969) வாழ்க்கை மூன்று திருப்பங்களைக் கொண்டதாக அமைந்தது எனலாம்.

அவரது வாழ்க்கையின் முதற் பகுதி கல்வி பெறுதலிலே கழிந்தது. ஹரோ, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளில் கல்வி கற்று சட்ட நிபுணராக வெளியேறிய ஜவகர்லால் ஏற்கனவே செல்வச் செழிப்புடையவர் மேலும் சட்டத்துறையில் இறங்கித் தனது வாழ்க்கையை வசதியானதாக அமைத்திருக்கலாம். ஆனுல் அதுதான் நடைபெறவில்லை, கல்வி கற்று தாய் நாடு திரும்பிய நேரு அண்ணல் காந்தி நாட்டின் விடுதலைக்காக ஆற்றிவரும் அயராப் பணியைக் கண்முன்னுகக் கண்டார். அப்பணி அவரை ஈர்ந்தது. மோதிலால் நேருவின் அருமைப் புதல்வரான அவர் நாட்டில் அன்னியர் ஆதிக்கத்தை அகற்றி சுதந்திரத்தை நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்க தன் வாழ்க்கைப் பாதையைக் காந்தி வழி திருப்பினுர், இது அவரது வாழ்க்கையின் இரண்டாவது பகுதியாகும் இக்காலப் பகுதிதான் நேரு காந்திமகானேடு சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடிய காலமாகும்.

காந்தி வழிதான் விடுதலையையளிக்குமெனக் கண்ட நேரு அவரது போராட்டங்களில் ஈடுபட்டு பலதடவைகள் சிறைக்குச் சென்றுர் ஆரம்பத்தில் மிகக் கோபக்காரனுகக் காணப்பட்ட நேருவை காந்தி தன்வழிக்குக் கொண்டுவந்து பல தடவை சிறைவாசம் செய்யப்பண்ணி அவரைப் புடம் போட்ட பொன்னுக்கினுர். மகாத்மாவின் தலைமையில் போராடி நாட்டின் விடுதலைக்காக கடுமையாக உழைத்தார். இவ்வியக்கங்களில் அவர் கொண்ட ஈடுபாடு அவரது முழுக் குடும்பத்தினரையும் அவரைப் பின்பற்றச் செய்தது. இவ்வாறு நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பலர் இவரால் ஈர்க்கப்பட்டனர். 1921-ம் ஆண்டு ஆரம்பமான காந்தியின் போராட்டத்தின் பயனுக இந்தியா 1947-ல் சுத

தமர் நேரு நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானக்கல்வியை ஊக்குவித்தார். வெளிவிவகாரங்களுக்கு மட்டுமன்றி எமது மனே வளர்ச்சிக்கும் விஞ்ஞானம் அத்தியாவசியம் என உணர்ந்த அவர் நாட்டில் நிலவும் இன, மத, சமூக ஏற்றத்தாழ்வு பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு விஞ்ஞானமே சிறந்தது அதனுல் தான் நான் விஞ்ஞானத்தை விரும்புகிறேன் எனக் கூறுவார். இதனுல்தான் அவர் இந்தியாவின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய விஞ்ஞான தொழில் நுட்ப கல்விக்கு முக்கியததுவம் கொடுத்து நாடெங்கிலும் இக் கல்விக்கான வசதிகளைச் செய்து கொடுத்தார்

இந்தியாவில் பஞ்சசீலத்தை உருவாக்கிய நேரு அதன் மூலம் பொது விவகாரங்களிற்கூட சுய கட்டுப்பாட்டை கடைப்பிடித்தார் பான்டுங், பெல்கிரேட் மகாநாடுகளுக்குச் சென்று அம் மகா நாடுகளில் இந்திய சீன ஒப்பந்தங்களையிட்டுப் பிரதான இடத்தை வகித்தார் எல்லா விஷயங்களிலும் மனிதத்தன்மையே எல்லா தேசங்களிலும் மேலானதாகக் கொண்டவராதலால் மனிதத் தன்மைக்கே முக்கியத்துவம் கொடுத்தார்.

விஞ்ஞானத்திலிருந்து சமூகவியல்வரை சகல சாஸ்திரங்களிலும் திறமை வாய்ந்தவரான ஜவகர்லால் ஒரு அரசியல் தலைவர் மட்டுமன்றி தத்துவஞானியாகவும், கலைஞராகவும், விளங்கினுர் மேலும் இயற்கையிலும் சிறுவர்கள் மேலும் அவருக்குள்ள விருப்பை இன்று அவர் பேரில் இந்தியாவில் உள்ள பூந்தோட்டங்களும், விளையாட்டு நிலங்களும் அழகிய சிறுவர் நிறுவனங்களும் எடுத்துக்காட்டுகின்றன பறவைகள் மிருகங்கள் ஆகியவற்றிலும் அதிக விருப்பமுடையவர் இயற்கைக் காட்சிகளை இரசிக்கத்தொடங்கினுல் நேரம் போவது தெரியாது மணிக்கணக்காக அமர்ந்துஇரசித்துக் கொண்டிருப்பார் கிராமங்களிலுள்ள பல்வேறு இனமக்களின் வாழ்க்கையை ஆவலோடு கவனிப்பதோடு அவர்களில் தானும் ஒன்றுகக் கலந்து அவர்களது நடன, நாடக நிழ்ச்சிகளிலும் பங்கு பற்றுபவர் என்ருல் நேரு எவ்வளவு தூரத்திற்கு சாதாரண மக்கள் வாழ்க்கையோடு ஒன்றியவராக இருந்தார் என்பது புலப்படும்



தலைசிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவரான ஜவகர்லாலுக்கு குழந்தைகள என்ருல் தனிவிருப்பு குழந்தைகளோடு சேர்ந்து விட்டால் அவரும ஒரு குழந்தையாகவேமாறி அவர்களின் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவார் இத்தகைய நெருங்கிய தொடர்பால் குழந்தைகள் இவரைக் கண்டவுன் சாச்சா (மாம )என அழைக்கத்தவறுவதில்லை இதனுற்ருன் இன்று பாரதத்தில் நேரு பிறந்த தினம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது

இறுதிவரை நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து சென்ற விடமெல்லாம் சமாதானத்துக்கே அடிகோலி உலக அரசியலரங்கில் முக்கிய பாத்திரதிரமாக விளங்கிய காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேரு அன்றும் இன்றும் மக்கள் மனதில் குறிப்பாகக் குழந்தைகள் உள்ளத்தில் அகலா இடத்தைப் பெற்றுள்ளார்

# நாட்டிலும் நகரிலும்

தமிழ்நாட்டில் சிறுகதை மன்னனுக புதுமைப்பித்தன் விளங்கியதுபோல ஈழநாட்டில் இலங்கையர்கோன் விளங்கினுர். அவர் மறைந்த துயரமான தினம் இன்று,

திரு என், சிவஞானசுந்தரம் காரியாதிகாரியாக (டி. ஆர். ஒ ) தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கைத் தமிழரில் ஒருவர். இளம் வயதிலேயே மிகவும் திறமையும் காண்பித்து இறக்கும்போது தலைமைக் காரியாதிகாரி பதவிக்கு வந்துவிட்டார். இன்று இருந்திருப்பாரானுல் தற்சமயம் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, திரு. பெருமையினுர், திரு. வெஸ்லி முதலியவர்களைப்போல அரசாங்க நிர்வாக சேவையில் (முந்திய சி. சி, எஸ்.) கடமையாற்றியிருப்பார்.

மிகவும் இளம் வயதில் காலன் அவரைப் பறித்துக் கொண்டுபோய்விட்டது இலங்கை அரசாங்க சேவைக்கு மட்டுமல்லாது இலங்கையின் இலக்கிய உலகத்துக்கே ஒரு பெரிய இழப்பு.

அவர் ஒரு மகா ரஸிகர். சங்கீதம் என்ருல் உயிரை விட்டுவிடுவார். ஈழத்தின் இசையாளர் சங்கத்தை ஸ்தாபித்தவரும் அதன் தலைவராக இருந்து இறக்கும் வரை நாகஸ்வரக் கோஷ்டியினரின் நன்மைக்காகப் பாடுபட்டவரும் இலங்கையர்கோன்.

ஆயிரத்தோராவது தடவையாக மயானகாண்டத்தை மேடையேற்றிய திரு. வி. வி. வைரமுத்துவை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி அவரை முன்னுக்குக் கொண்டுவருவதில் அரும்பாடுபட்டு உழைத்தவர் இலங்கையர்கோன். இதை திரு வைரமுத்து அவர்களே ஒப்புக்கொள்ளுவார், இருவருக்குமிடையே மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஒருவர் கலைஞர், மற்றவர் ரஸிகர். கலை இருவரையும் ஒன்றுக இணைத்துக்கொண்டது.

திரு. வைரமுத்துவின் மனைவி இறந்துவிட்டார் என்ற தந்தி கிடைத்ததும் இலங்கையர்கோன் குலுங்கிக் குலுங்கி அழுததைப் பார்த்தபோதுதான் கலை என்பது இப்படியும் ஓர் பிணைப்பை உண்டாக்குமோ என்று ஆச்சரியப்பட்டேன். அத்தனை தூய்மையானகலைப் பித்தர் அவர்.

இல்லாவிட்டால் ரஸம்ரஸமான அவ்வளவு சிறுகதைகளையும் எழுதியிருக்க முடியுமா?

இலங்கையர்கோன் முதன் முதலில் 'ஈழகேசரியில்' கதைகள் எழுதினுர். காரியாதிகாரியாக அவர் இலங்கையின் தமிழ்ப்பகுதிகள் எல்லாவற்றிலும் கடமையாற்றினுர். ஆகவே அந்தந்தப் பகுதி மக்களின் பழக்கவழக்கங்கள், சூழ்நிலை யாவும் அவருக்கு தலைகரணமான பாடம. உத்தியோக முறையில் அவர் மிகவும் சாதாரண மக்களுடன் பழக நேர்ந்தது. இந்த அனுபவங்களை எல்லாம் அவர் தமது சிறுகதைகளில் புகுத்தினுர்.

'கலைமகள்' பத்திரிகைக்கு அந்தக்காலத்தில் ஈழத்திலிருந்து சிறுகதைகள் எழுதிய எழுத்தாளர்களில் சி. வைத்தியலிங்கம், சோ சிவபாதசுந்தரம் முதலியவர்களுடன் இலங்கையர்கோனும் ஒருவர்.

நாடகங்கள்எழுதுவதிலும் அவருக்கு மிகவும் பிரியம் 'லண்டன் கந்தையா' வின் சிருஷ்டிகர்த்தா அவர்தான் என்பது பலருக்கு தெரியாமல் இருக்கலாம். இலங்கை வானெலியின் கிராம நிகழ்ச்சியில் இரண்டு மூன்று வருடங்களாக 'விதானையார் வீட்டில்' என்ற ஒருதொடர் நாடகத்தைஎழுதி வானெலி ரசிகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தார் இலங்கையர்கோன். இதில் பயிற்சிபெற்ற சில கலைஞர்கள் இன்று மிகவும் பிரபல்யமாய் இருக்கின்றனர்.

இலங்கையர்கோன் ஒரு முழுமையான கலைஞன். ஏதோ ஒருஅடையமுடியாத லட்சியத்தை நினைத்து ஏங்கித் தவிப்பதுபோல அவர் எனக்குக் காட்சியளித்தார். எது அந்தலட்சியம் என்பது அவருக்குத் தெரியாது 'வாழ்க்கையில் ஓர் லட்சியம் இருககவேண்டும் ... ... ......' என்று அவர் அடிக்கடி என்னிடம் சொல்வார்.

அந்தலட்சியத்தை நாடித்தான் ஐம்பது வயதுக்குள்ளேயே இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்துபோனுரோ?

(அவர் எழுதிய வானெலி நாடகம் ஒன்று இவ்வார வாரமலரில் இடம் பெறுகிறது.)

—வழிப்போக்கன்

**கச்சியப்ப சுவாமிகள் கவித்திறன்**

## விநாயகப் பெருமான் கொண்ட

## கைதடியில் இன்று 6-வது சைவமகாநாடு ஆரம்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தை தவிர்க்க வழி இல்லையா? மனமுண்டானுல் நிச்சயம் வழி உண்டு.

இந்திய ஜனுதிபதியின் தேர்தலை முன்னிட்டுத்தான் காங்கிரஸுக்குள் பெரும் பிளவுஏற்பட்டது. சஞ்சீவி ரெட்டியின் பெயரைப் பிரேரித்த இந்திராகாந்தி பின்னர் அவருக்குஎதிராகவே வேலைசெய்ததை அவரது மனமே சரியென்று ஒப்புமா என்பது சந்தேகம். இப்படி நேர்ந்ததற்காகத் தாம்வருந்துவதாக அவர் ஒரு சொல் சொல்லியிருக்கலாம். இதே சமயம் ஒரு பெரிய நாட்டின் ஆட்சிப்பொறுப்பான பெரும் பளுவை ஒரு தலைசிறந்த பெண்மணியிடம் ஒப்புவித்துவிட்டு அவர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காமலும் அவருக்கு நம்பிக்கையுள்ள ஒருவரை ஜனுதிபதிப் பதவிக்கு அபேட்சகராக நியமிக்காமலும் விட்டதை காங்கிரஸ் தலைவர் எப்படிச் சரியென்று கூறமுடியும்? அரசியலில் பழுத்த பழமும் உப தலைவராக இருந்தவருமான திரு வி வி, கிரியின் பெயரை ஒப்பாமல் அவருக்குப் பதில்சஞ்சீவரெட்டி அவர்களை ஜனுதிபதிப் பதவிக்கு போட்டியிடச்செய்து அவரை ஆதரித்தது என்ன காரணம்?

உதவிப் பிரதம மந்திரிப் பதவி வகித்த மொரார்ஜி தேசாய் அவர்களை அப் பதவியிலிருந்து திடீரென்றுநீக்

இந்தியா அரசியல் விடுதலை பெற்றுலும் இன்னும் பொருளாதார விடுதலையைப் பெறவில்லை உள்நாட்டு வெளிநாட்டு ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன, இந் நிலையில் தேசாபிமானிகளான தலைவர்களுக்கு சிற்சில வேற்றுமைகள்ஏறபட்டாலும் நாட்டின் நன்மைக்காக அவர்கள் மீண்டும் சேர்ந்து ஒத்துழைக்கத் தவறமாட்டார்கள் நல்லவேளையாக இருசார்பினரின் நம்பிக்கையையும் பெற்ற எல்லைப்புறகாந்தி அப்துல்கபார்கான் இந்தியாவிலுள்ளார், அவரும் ஆசார்ய விஞேபா பாவேயும் இச்சமயம் கலந்து ஆலோசித்து வருகிறுர்கள், காங்கிரசில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இப்பிளவும்கூட ஒரு விதத்தில் நன்மைபயக்கக் கூடும். எப்படியும் இதனுல் நாட்டுக்குபெரியஆபத்து எதுவும் ஏற்பட தியாக சீலர்களான இருதரப்பு தலைவர்களும் விட்டுவிட மாட்டார்களென்றே நம்புவோம்.

## இசை விருந்து

யாழ்ப்பாணம், வெள்ளி சங்கீதவித்துவான், வானெலிபாடகர் திரு. எ. கே கருணைகரனின் இன்னிசைக்கச்சேரிஇம்மாதம் 30-11-69-ல் தமிழ் கலை அரங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழவிருக்கிறது.

இவரது கச்சேரிகள் இலங்கையில் மட்டுமல்ல சென்னை வானெலியிலும் தென்னிந்தியாவிலுள்ள பலபாகங்களிலும் இடம் பெற்றுள்ளன.

அவரது முழுக் குடும்பத்தினரையும் அவரைப் பின்பற்றச் செய்தது. இவ்வாறு நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பலர் இவரால் ஈர்க்கப்பட்டனர், 1921-ம் ஆண்டு ஆரம்பமான காந்தியின் போராட்டத்தின் பயனுக இந்தியா 1947-ல் சுதந்திரமடைந்தது,

சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரானுர் ஜவகர்லால், இங்குதான் அவரது வாழ்க்கையின் 3-வது கட்டம் ஆரம்பமாகியது. அன்னியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த ஒரு நாட்டு மக்கள் மேலும் பொருளாதார சமூகத் துறைகளில் சுதந்திரம் பெறவேண்டியவர்களாக உள்ளார்கள் என உணர்ந்த பிரதமர் நேரு இச்சுதந்திரத்தை அளிக்கத் தன் பதவிக்காலம் முழுக்கப் பாடுபட்டார் அரசியல் சமத்துவம் மக்களுக்கு அளிக்கப்படுவதோடு பொருளாதார சமூகத்துறைகளிலும் அவர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் சுதந்திரம் பயனுள்தாக அமையும் என அவர் அடிக்கடி குறிப்பிடுவார், இத்தகைய சுதந்திரத்தை மக்களுக்களிக்க விஞ்ஞானம் பிரதானமாகத் தேவையெனக் கருதிய பிர



பிரதமர் நேரு அன்றும் இன்றும் மக்கள் மனதில் குறிப்பாகக் குழந்தைகள் உள்ளத்தில் அகலா இடத்தைப் பெற்றுள்ளார்

என்பது இப்படியும் ஓர் பிணைப்பை உண்டாக்குமோ என்று ஆச்சரியப்பட்டேன். அத்தனை தூய்மையான கலைப்

வாரமலரில் இடம் பெறுகிறது.)

—வழிப்போக்கன்

### கைதடியில் இன்று 6-வது சைவமகாநாடு ஆரம்பம்

# 'தெய்வ பத்தியை இளைஞர் மனத்தில் பதிக்கவேண்டும்'

## ஸ்ரீகாந்தா ஆசியுரை

யாழ்ப்பாணம் வெள்ளி 'மனிதன சந்திரனையே வெற்றிகொண்ட வேளையிது முன் எப்போதுமில்லாத அளவுக்குத் தெய்வ பக்தியுடன் முன்னேறவேண்டிய வேளையிது. பிரபஞ்சத்தையே படைத்து அதனையே ஆட்டிப்படைக்கும் தெய்வ சக்தியை நமது இளைஞர்கள் மனத்திலிருத்தவேண்டிய காலமிது. இந்தச்சந்தர்ப்பத்தில் இந்து வாலிபர் மகாநாடு எடுப்பது சாலச் சிறந்ததே'

அகில இலங்கை சேக்கிழார் மன்றத் தலைவரும்' காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுமான திரு. எம். ஸ்ரீகாந்தா கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் ஆருவது மாநாட்டுக்கு அனுப்பிவைத்த ஆசிச் செய்தியில் மேற்கண்டவாறு வாழத்தியுள்ளார்

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசும்பிள்ளை தமது ஆசிச்செய்தியில், 'யாம் தற்போது சீவிப்பது சரித்திர சம்பந்தமான சூழ்நிலையின் மத்தியில், இச்சூழ்நிலையில் மாதம் முன் இடம்பெறவேண்டியதாயிருக்கிறது. தென்னிலங்கையில் பௌத்தம் எப்படித் தலைநிமிர்ந்து நிற்கிறதோ, அப்படியே எம்மத்தியிலும் சைவம் தலைநிமிர்ந்து நிற்பதே விரும்பத்தக்கது. இதற்கு சைவ மக்களாகிய நாம் சமய பக்தியோடும் சமூக உணர்ச்சியோடும் எமது வாழ்க்கையை நடத்த வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்

திருமுருக கிருபானந்த வாரியார் தமது ஆசியுரையில், கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்தியுள்ளார்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர திருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் மதுரை ஆதீன கர்த்தா தமது ஆசியுரையில், தங்கள் மகாநாட்டினுல் மக்கள் பக்தியுடையவர்களாவும், பண்பாடு உடையவர்களாகவும், அதில் ஈடுபடுகிற வாலிபர்களும் பிறரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும் திருவருள் பாலிக்குமாறு ஆசீர்வதித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தவத்திரு குன்றக்குடி அடிகளார், சாவகச்சேரி எம். பி. திரு. வி என் நவரத்தினம், பட்டிருப்பு எம் பி திரு எஸ் எம் இராசமாணிக்கம், சித்தாந்த வித்தகர் திரு சோமசுந்தரச்செட்டியார், திருநா முத்தையா, செனட்டர் திரு நீதிராசா, திரு நா பார்த்தசாரதி, கோப்பாய் எம்.பி திரு வி கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும் ஆசிச் செய்தி வழங்கியுள்ளனர்

### இன்றைய நிகழ்ச்சிகள்

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் 6-வதுசைவமகாநாடு இன்று ஆரம்பமாகிமூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறும். விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். கைதடி இந்து வாலிபர் சங்கத்தலைவர் திரு. சு. கனகசபாபதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகிப்பார் சிறப்புரைகளும் இடம்பெறும்

8-ம் கலத் தொடர்ச்சி

எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருளுந் திறத்தை வியந்து தியானிக்கிறுர்.

'உச்சியின் மகுடமின்ன
ஒளிர்தர நுதலினுேடை
வச்சிர மருப்பி னெற்றை
மணிசொற்கிம்புரி
வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க
வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகட சக்ர
கணபதிக்கன்பு செய்வோம்''

ஒற்றை மருப்புக் கொண்ட வேழமாமுகமே விநாயகப்பெருமானது அருள்விளக்க வடிவம் என்பதைக் குறிப்பிடுத் தியானிக்கும் திறம் போற்றத் தகுந்தது.

விநாயகப்பெருமான் கொண்ட யானைத் திருமுகத்தைச் சிறிது உற்று நோக்குவோம். வலத்திருக்கண்ணை முதற் சுழியாகத் தொடங்கி ஓடை எனப்படும் நெற்றிப் பட்டத்தை வளைத்துக்கொண்டு வந்து இடத்திருக்கண்ணை இரண்டாம் சுழியாக்கிய பின் இடத்திருமருப்பையும் வளைத்து அப்பால் துதிக்கரம் வரை ஓரிரேகையை அமைத்து இறுதியிற் சுழிக்க ''ஓம்'' என்னும் பிரணவ வடிவம் தோன்றுவதை எவரும் கண்டு களிக்கலாம்.

''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' எனப் போற்றப்படும் மூத்த பிள்ளையாருக்குரிய பிரணவத் தியானமாகவே இந்த இரண்டாவது காப்புச் செய்யுளை ஆசாரியசுவாமிகள் அமைத்துள்ளார்.

வலத்திருக்கரம் ஒன்றில் தரித்துள்ள ஒற்றை மருப்பைக் காணும் எவருக்கும் அது எதற்காக என்ற வினு ஏழாமலிராது. அந்த மருப்பு இருந்து முரிக்கப்பட்ட எஞ்சிய ராகமும் திருமுகத்தின் வலப்புறத்தே தோற்றுவதைக் காணலாம். கயமுகாசுரனைச் சங்கரிப்பதற்காக ஒரு தந்தம் முரிக்கப்பட்டது என்பது புராண வரலாறு. (தொடரும்)

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### கச்சியப்ப சுவாமிகள் கவித்திறன்

# விநாயகப் பெருமான் கொண்ட வியன்பெரு வடிவம்

(நேற்றய தொடர்ச்சி)

விசுவரூபம் என்பது அகிலமுந்தாமேயன்றிப் பிறிதாக ஒன்று இல்லைஎன அமைதல். இதனையே வியன்பெரு வடிவு என ஆசாரிய சுவாமிகள் குறிப்பிடுகின்றுர். வியன்பெருவடிவு கொள்ளுதல் பரம்பொருளாகிய இறைவனுக்கே உரியது. அளக்கலாகா அளவும், துளக்கலாகாத் திண்மையும் விளக்கலொண்ணுப் பேரொளியும் மதிக்கலாகா மாண்பும் கொண்டு நிலைபேருண 'ஸ்தாணு'வாக உள்ளவர் சிவபரம்பொருள் நிஷ்களப்பாப்பிரமமாகிய சிவத்தினிடம் சக்தித்துவம் தொழிற்படும்போது முகளவடிவமான தோற்றங்கள் உண்டாகின்றன.

எமது சிற்றறிவுக்கு எட்டியவரையில், பரப்பிரமம் ஐந்து இடங்களில் விசுவரூபங் கொண்ட வரலாறுகள் புராணவாயிலாக அறியக்கிடக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் விநாயகப்பெருமான் கொண்ட வியன்பெரு வடிவம். சிவாம்சம் தூலமாகவும் சக்தியம்சம் நுட்பமாகவும் அமைந்த திருத்தோற்றமே விநாயகப்பெருமான் ஆவர்.

''வெருவரு செலவின்
வேழமுகத்தனை விதித்த
சாபப்
பெருவலி தன்னைச்சாடும்
பெற்றியாற் சாபங்கூறுன்

எனவரும் திருவிளையாடற் புராணக் கூற்றுல் இது தெளியப்படும்.

முன்னெருபோது விநாயகப்பெருமான் பிரமதேவனுக்குக் காட்டியருளிய விசுவரூபத்தில் அகிலமுந்தாமேயாய்க் கொண்ட திருத்தோற்றத்தின் உதரபந்தனத்தில் சூரியமண்டலமே நாயக மணியாகத் தோன்றியது, அதனையே இங்கு தாமரை நாயகன் அகடசக்கர வின்மணியாவுறை எனக் குறிப்பிட்டமை மதிற்பிற்குரியது:

இனி 'விகடசக்கரன்' என்ற திருப்பெயர் விநாயகப்பெருமானுக்கு அமைந்தவாற்றைக் காண்போம்: காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள விக்னேசுவரருக்கு விகடசக்கர விநாயகர்என்ற திருநாமம் வழங்கப்படுகிறது. தக்கன் செய்த யாகத்தை வீராத்திரக் கடவுள் சென்று அழிவுபடுத்தினுர். அப்போது யாகாதிபதியாக இருந்தவிட்டுணு தமது சக்கரப்படையை வீரபத்திரக் கடவுள் மாலையாகப் பூண்டிருந்த வெண்டலைகளுள் ஒன்று அந்தச் சக்கரத்தை கௌவிக்கொண்டது. பின்பு விட்டுணுவின் பொருட்டு அச்சக்கரத்தைப் பெறவிரும்பி அவரது சேனுபதியாகிய விஷ்வசேனன் காஞ்சீபுரஞ் சென்று சிவபிரானைக் குறித்து தவம் செய்தான். அப்போது வீரபத்திரக் கடவுள் அவன் முன் காட்சிகொடுக்க அவன் சக்கராயுதத்தைமீட்டுத்தரும்படி இரந்தான். அவர் அதுமிடம் இல்லையென்றும் கபாலமே அதனைக்கௌவிக் கொண்டது என்றும் எப்படியேனும் அனிடமிருந்தே பெற்றுக்கொள்ளும்படியும் கூறியருளினுர். விடுவசேனன் கை, கால், வாய், நாசி, கண் என்பவற்றைக் கோணலாக வளைத்துச் சரித்து விகடக்கூத்தாடினுன் அதனைக்கண்டவர் யாவரும் நகைத்தனர் சக்கரத்தைக் கௌவியிருந்த கபாலமும் சிரிக்கவே சக்கரம் நிலத்தே விழுந்தது. விநாயகப் பெருமான் அதனைக் கவர்ந்துகொண்டு ஒன்றும் அறியார் போல் இருந்தார் அதுகண்ட விஷ்வசேனன் அவர் சந்நிதியை அடைந்து அவர் திருமுன்பும் முன்போல விகடக்கூத்தாடி அதனைத் தரும்படி இரந்தான் இன்புற்ற பெருமான் அதனை அவனிடம் கொடுத்தார் அதனுலேயே அப்பெருமானுக்கு விகடசக்கர விநாயகர் என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று இக்கருத்தையெல்லாம் உள்ளடக்கியே ஆசாரிய சுவாமிகள் விநாயக வணக்கமாக அமைத்த முதலாவது காப்புச்செய்யுளில் 'விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்' என மூத்த பிள்ளையாரது திருவடித் தாமரைகளைத் தியானித்தமை தெளிவாகப் புலப்படுகிறது.

இவ்வாறு முதன் முதலாக விநாயகப்பெருமானது திருவடிகளைத் தியானித்தவர் அடுத்த தான இரண்டாவது காப்புச் செய்யுளில் அப்பெருமான் காஞ்சிபுரத்தில் உருவத்திருமேனி கொண்டு

5-ம் கலம் பார்க்க)

- க.வை, ஆ. சர்மா -

# சோதிடர் பார்வையில் நமது பிரதமர் டட்லி



இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்யும் பிரதமா டட்லி சேனநாயகாவின் சாதகம் இது இவர்1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ந் திகதி நண்பகல் 1-18 மணிக்கு கொழும்பில் பிறந்தார். லக்கினம் - கன்னி, நட்சத்திரம்-பூரட்டாதி 3ம் பாதம், குரு திசையில் நின்ற வருடம் 6, மாதம் 7. நாள் 13.

இவருக்கு தற்பொழுது வெள்ளிதிசையில் ராகுபுத்தி நடைபெறுகின்றது. வெள்ளி இவருக்குஒருபெரிய யோகக்கிரகம் லக்கினத்திற்கு 2 திபதி 9 திபதி சந்திரனுக்கு 4 திபதி 9 திபதி கடக ராசியில் பெலவானுகி இருக்கின்றுர். அத்துடன் வெள்ளி புதனின் அம்சத்திலும் கேதுவின் உபவேந்துவிலும் இருக்கின்றுர். கேது உபவேந்துவில் இவரின் அதிர்ஷ்டப் புள்ளி 10-ம் வீட்டிலிருப்பதால் இவருக்கு வெள்ளி திசை மிகுந்த அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்.

இராகு புத்தி நாதன் வெள்ளிக்கு 10 ம் வீட்டிலும் வெள்ளியின் அம்சத்திலும் உபவேந்துவிலும் கம்பீரமாக வீற்றிருக்கின்றுர். அத்துடன் தசாம்சத்தில் 10-ம் வீட்டில் பெலவானுக இருக்கின்றுர். இராகுபுத்தி 2-4-1971 வரை நீடிக்கும்.

இக்காலத்தில் இவரது நிலையில் எதுவித மாற்றமும் ஏற்படாது பிரதமராகத் தொடர்ந்து இருப்பார். இவருடைய ஆட்சி மென் மேலும் கீர்த்திபெறும்.

வாழ்க பிரதமர்!

— சோதிராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org